நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு பரிந்துரை

# நால்வரின் சிகிச்சைக்கு ரூ.11.50 லட்சம் உதவித்தொகை!

## பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படுகிறது!

புதுடெல்லி, பிப். 24 -

நால்வரின் புற்றுநோய் சிகிச்சைக்காக ரூபாய் 11 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் உதவித்தொகை, பிரதமர் தேசிய நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படுகிறது என்று டி.ஆர்.பாலு, எம்.பி., பிரதமர் அலுவலகம் கடிதம் எழுதியுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகப் பொருளாளரும், கழக நாடாளுமன்றக் குழுத் தலைவருமான டி.ஆர். பாலு, காஞ்சிபுரம் மாவட்டம் - பரங்கிமலை பகுதியைச் சேர்ந்த திருமதி சந்தியா, பெருங்குளத்தூர் பகுதியைச் சேர்ந்த திருமதி செல்வி, மாடம்பாக்கம் பகுதியைச் சேர்ந்த தனபாலன் மற்றும் குரோம்பேட்டையைச் சேர்ந்த கோபி ஆகிய நான்கு பேரின் புற்றுநோய் சிகிச்சைக்காக பிரதமர் தேசிய நிவாரண நிதியிலிருந்து உதவிடுமாறு முறையே 28.12.2023, 6.1.2024, 26.12.2023 மற்றும் 27.12.2023 ஆகிய தேதிகளில் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்குத் தனித் தனியே கடிதங்கள் எழுதியிருந்தார்.

டி.ஆர்.பாலுவின் பரிந்துரையினையும் வேண்டுகோளினையும் ஏற்ற பிரதமர் அவர்கள், திருமதி சந்தியா அவர்களின் புற்றுநோய் சிகிச்சைக்காக ரூபாய் மூன்று லட்ச ரூபாயும் (ரூ.3,00,000/), திருமதி செல்வி அவர்களின் சிகிச்சைக்காக ரூபாய் மூன்று லட்ச ரூபாயும் (ரூ.3,00,000/), தனபாலனின் சிகிச்சைக்காக ரூபாய் இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாயும் (ரூ.2,50,000/) மற்றும் கோபியின் அவர்களின் சிகிச்சைக்காக ரூபாய் மூன்று லட்ச ரூபாயும் (ரூ.3,00,000/) பிரதமர் தேசிய நிவாரண நிதியிலிருந்து உதவித் தொகையாக வழங்கப்படுவதாகத் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக பிரதமர் அலுவலகம், டி.ஆர்.பாலு எம்.பி., 18.1.2024, 22.1.2024, 5.2.2024 மற்றும் 8.2.2024 தேதியிட்ட கடிதங்களில் தெரிவித்துள்ள விவரம் பின்வருமாறு:

பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து, திருமதி சந்தியா, திருமதி செல்வி, தனபாலன் மற்றும் கோபி ஆகியோரது புற்றுநோய் சிகிச்சைக்காக வழங்கப்படும் உதவித் தொகையானது பயனாளர்கள் சிகிச்சை பெறும் மருத்துவமனையான சென்னை அடையாறு புற்றுநோய் மையத்திற்கு வழங்கப்படும் என்றும், சிகிச்சை நிறைவுற்ற பின்னர், உரிய ஆவணங்களின் நகலைப் பிரதமர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும், ஆவணங்கள் கிடைத்த பின்னர், உதவித் தொகையானது உடனடியாக மேற்கண்ட மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும், பிரதமர் அலுவலகக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

EVM கன்ட்ரோல் யூனிட் இடையே வி.வி.பேட் வைக்க தி.மு.க. எதிர்ப்பு!

# தேர்தல் ஆணைய புதிய நடைமுறை சந்தேகங்களை ஏற்படுத்துகிறது!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேட்டி!



சென்னை, பிப். 24 -

நாடாளுமன்ற தேர்தலின் போது மின்னணு வாக்குப்பதிவு எந்திரத்திற்கும் கன்ட்ரோல் யூனிட்டிற்கும் இடையே வி.வி. பேட் வைப்பது சட்டத்திற்கு புறம்பானது என்று தேர்தல் ஆணையத்திடம் தி.மு.க கூறியுள்ளது. இந்த புதிய நடைமுறை பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தி உள்ளதாக தி.மு.க அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தெரிவித்துள்ளார்.

மக்களவை தேர்தலுக்கான ஏற்பாடுகளை தேர்தல் ஆணையம் முழுவீச்சில் மேற்கொண்டுள்ளது. தேர்தல் ஏற்பாடுகள் குறித்து மாநிலங்களுக்குச் சென்று இந்திய தலைமை தேர்தல் ஆணையர் ராஜீவ்குமார் நேரடியாக ஆய்வு மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாட்டில் தேர்தல் ஏற்பாடுகள் குறித்து ஆய்வு செய்வதற்காக தலைமை தேர்தல் ஆணையர் ராஜீவ் குமார், தேர்தல் ஆணையர் அருண்கோயல், மூத்த துணை தேர்தல் ஆணையர்கள் தர்மேந்திர சர்மா, நிதிஷ் வியாஸ், துணைத் தேர்தல் ஆணையர்கள் அஜய்பாது, மனோஜ்குமார் சாகு உள்ளிட்டோர் நேற்று முன்தினம் சென்னை வந்தனர்.

இந்நிலையில் சென்னை விமான நிலையம் அருகே உள்ள நட்சத்திர ஓட்டலில் அனைத்துக்கட்சி பிரதிநிதிகளுடன் தேர்தல் ஆணையர்கள் ஆலோசனை நடத்தினர். ஒவ்வொரு கட்சியுடனும் தனித்தனியாக ஆலோசனை நடத்தப்பட்டது. தேசிய கட்சிகள், மாநில கட்சிகள் என 10 கட்சிகளுடன் தேர்தல் ஆணையர்கள் ஆலோசனை மேற்கொண்டனர்.

இதில் தி.மு.க. சார்பில் தி.மு.க அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, நாடாளுமன்ற உறுப்பினர் என்.ஆர்.இளங்கோ உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதைத்தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய தி.மு.க. அமைப்பு செயலாளர் ஆர்.எஸ். பாரதி, தேர்தல் ஆணையம் மீது பொதுமக்களுக்கு நம்பிக்கை ஏற்படும் வகையில் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளதாக தெரிவித்தார். தேர்தல் ஆணையத்திடம் அளிக்கப்படும் மனுக்கள் மீது மாநில தேர்தல் அதிகாரியே நடவடிக்கை எடுக்கும் வகையில் அதிகாரம் இருக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

மின்னணு வாக்குப்பதிவு எந்திரத்திற்கும் கன்ரோல் யூனிட்டிற்கும் இடையே வி.வி.பேட் வைப்பது பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளதாகவும், இது சட்டத்திற்கு புறம்பானது என்றும் தெரிவித்துள்ளார்.

அனைத்துக்கட்சி பிரதிநிதிகளுடன் ஆலோசனை நடத்திய தலைமை தேர்தல் ஆணையர் தொடர்ந்து மாவட்ட தேர்தல் அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினர். அப்போது வாக்காளர் பட்டியல், தேர்தல் வாக்குப்பதிவு மையங்கள், வாக்கு எண்ணிக்கை மையங்கள், பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து கேட்டறிந்தனர்.

---

மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காண

# இந்திய - இலங்கை கூட்டுப் பணிக் குழுக் கூட்டத்தை உடனே நடத்துக!

## ஒன்றிய அரசுக்கு தமிழ்நாடு மீனவர் நலத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் வேண்டுகோள்!

**சென்னை, பிப். 24 -**

**மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காண இந்திய இலங்கை கூட்டுப் பணிக் கூட்டம் உடனே நடத்தப்பட வேண்டும் என்று ஒன்றிய அரசுக்கு மாநில மீனவர் நலத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் வேண்டுகோள் விடுத்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.**

“தமிழக இலங்கை மீனவர்கள் பிரச்சினை தொடர்பாக மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அறிக்கை வருமாறு

பாக் நீரிணைப்பகுதியில் பன்னாட்டு கடல் எல்லையானது இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் மிகவும் குறுகியதாக உள்ளது.

பாக்வளைகுடா பகுதியில் குறிப்பாக இராமநாதபுரம் புதுக்கோட்டை, தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களைச் சார்ந்த மீனவர்கள் மீன்பிடிப்பில் ஈடுபட்டிருக்கும் போது, அவர்களது படகு இயற்கை சீற்றம் மற்றும் இயந்திர கோளாறு போன்ற காரணங்களினால் பன்னாட்டு எல்லைக்கோட்டினைக் கடந்து செல்ல நேர்கிறது.

இந்நேர்வுகளில், தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கை இராணுவத்தினரின் தாக்குதலுக்கும் கைதுக்கும் உள்ளாகின்றனர்.

இலங்கைக் கடற்படையினரால் தமிழ்நாடு மீனவர்கள் துன்புறுத்தப்படும் போதும் கைது செய்யப்படும்போதும் முதலமைச்சர் அவர்கள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டி மாண்புமிகு ஒன்றிய பிரதமர் மற்றும் ஒன்றிய வெளியுறவு துறை அமைச்சர் ஆகியோரை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள்.

இவ்வாறான தாக்குதல் மற்றும் கைது சம்பவங்களில், ஒன்றிய அரசு தலையிட்டு இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழ்நாடு மீனவர்கள் மற்றும் படகுகளை உடனடியாக விடுதலை செய்திட உரிய நடவடிக்கைமேற்கொள்ளவும் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

இலங்கை அரசு மீனவர்களை மட்டும் அவ்வப்போது விடுவித்துவிட்டு, படகுகளை நாட்டுடமையாக்கும் செயல்களை தொடர்ந்து செய்து வருகின்றது.

படகுகளை பறிகொடுத்த மீனவர்கள் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்து பெரும்துயரத்திற்கு உள்ளாகின்றனர்.

தற்போதுவரை, இலங்கை சிறையில் இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் 49 மீனவர்களும் 151 மீன்பிடி படகுகளும் உள்ளன.

சிறைபிடிக்கப்பட்ட 151 படகுகளில் 12 படகுகள் இலங்கை நீதி மன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ளது. இதில் மீட்கும் நிலையில் உள்ள 10 படகுகளையும் மீட்டு தமிழகம் கொண்டுவர முதலமைச்சர் அவர்கள் கடந்த அக்டோபர் 2023 அன்றே நிதி ஒதுக்கி மீட்புக் குழு அமைத்து ஆணையிட்டார்கள்.

ஆனாலும், ஒன்றிய அரசானது தமிழ்நாட்டின் மீட்புக்குழு இலங்கைக்கு சென்று விடுதலை செய்யப்பட்ட படகுகளை தமிழ்நாட்டிற்கு கொண்டு வருவதற்கான அனுமதியை இன்றுவரை வழங்கவில்லை.



அதேபோல, தமிழக இலங்கை மீனவர்களுக்கிடேயேயான பிரச்சினைகளுக்கு தீர்வு காணும்பொருட்டு நடத்தப்படும் இந்திய இலங்கை கூட்டுப்பணிக்குழு கூட்டம் (*Indo - Srilankan Joint working committee meeting*) 25/03/2022 க்கு பின்னர் இதுவரை நடைபெறவில்லை.

இந்த கூட்டத்தை நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள ஒன்றிய அரசை முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள்.

ஆனாலும், தமிழ்நாடு மீனவர் பிரச்சினையில் ஒன்றிய அரசு தமிழ்நாட்டு மீனவர்களை இந்திய மீனவர்கள் என்று கருதாமல் பாராமுகமாகவே செயல்பட்டு வருகிறது.

அரசியல் காரணங்களுக்காக மீனவர்களை ஏமாற்றும் நோக்கத்தில் ஒன்றிய அமைச்சர்கள் அவ்வப்போது இராமேஸ்வரம் பகுதிகளுக்கு சென்று மீனவர்களை சந்தித்து இலங்கை அரசால் சிறைபிடிக்கப்பட்ட படகுகளை மீட்டுத்தருவோம் என்று வாக்குறுதி தருவதும், பாரதிய ஜனதா கட்சியினர் மீனவ பிரதிநிதிகளை டெல்லிக்கு அழைத்துச் சென்று ஒன்றிய அமைச்சர்களை சந்திக்க வைப்பதும் அவ்வப்போது நடந்து வருகிறது.

ஆனால், சிறைபிடிக்கப்பட்டு இலங்கையில் உள்ள படகுகளை மீட்பதற்கு எந்தவொரு திடமான நடவடிக்கையும் ஒன்றிய அரசால் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்பதே உண்மை.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இலங்கை அரசால் சிறைபிடிக்கப்பட்டு சேதமடைந்த 152 மீன்பிடி படகுகளுக்கு ரூ.6.84 கோடி நிவாரணமாக வழங்கி மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாத்துள்ளார்கள்.

எனவே, தமிழ்நாட்டு மீனவர்களின் மேல் அக்கறை இல்லாத ஒன்றிய அரசு மேலும் காலம் தாழ்த்தாமல் இலங்கை அரசால் சிறைபிடிக்கப்பட்ட படகுகளை விடுவிப்பதற்கும் இலங்கை நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டு மீட்கும் நிலையில் உள்ள 10 படகுகளை தமிழ்நாட்டுக்கு கொண்டு வருவதற்கு அமைக்கப்பட்ட மீட்புக்குழு இலங்கை செல்ல உடனடியாக அனுமதியும் வழங்க வேண்டும்.

அதேபோல, இந்திய - இலங்கை கடற்பகுதியில் இருநாட்டு மீனவர்களும் அச்சமின்றி மீன்பிடி தொழிலில் ஈடுபட நெடுங்காலமாக நடத்தப்படாமல் இருக்கும் இந்தியஇலங்கை கூட்டுப்பணிக்குழு கூட்டத்தையும் உடனடியாக நடத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று ஒன்றிய அரசை கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு தமது அறிக்கையில் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

---

மதுரையில் ‘எய்ம்ஸ்’ அறிவிக்கப்பட்டது போல அல்லாமல்

# கோவையில் நூலகம் கட்டி முடிக்கப்பட்டு ஜனவரி 2026 இல் திறக்கப்படும்!

## சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சென்னை, பிப். 24–**

**கோவையில் நூலகம் அமைக்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டதை பா.ஜ.க. உறுப்பினர் திருமதி. வானதி சீனிவாசன், அந்த நூலகம் எங்கே அமைக்கப்படும் எவ்வளவு நிதி ஒதுக்கப்படும் எப்போது ஆரம்பிப்பீங்க, எப்போது அந்தப் பணி முடிவடையும், என்று கேள்வி எழுப்பி இருந்தார்.**

**இதற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று பதிலளிக்கையில் மதுரையில் எய்ம்ஸ் அறிவிக்கப்பட்டதைப் போல் இல்லாமல் குறிப்பிட்டக் காலத்திற்குள் கோவை நூலகம் கட்டி முடிக்கப்பட்டு 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் அந்த நூலகம் திறந்து வைக்கப்படும் என்று தமது பதிலில் உறுதியுடன் தெரிவித்தார்.**

முதல்வர் அளித்த பதிலுரை வருமாறு:

பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் சட்டமன்றப் பேரவையில் நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் பங்கேற்று உரையாற்றி இருக்கக்கூடிய உறுப்பினர்களுக்கு எல்லாம் மிகத் தெளிவாக, விளக்கமாக, விரிவாக நம்முடைய அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் பதிலளித்திருப்பது உள்ளபடியே பாராட்டுக்குரிய வகையில் (மேசையைத் தட்டும் ஒலி) அமைந்திருக்கிற காரணத்தால் என்னுடைய வாழ்த்துகளையும் மனதார நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நேற்றையதினம் விவாதத்தின்போது சில குறிப்பிட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் வைத்த வினாவிற்கு விளக்கம் சொல்லியிருக்கிறார். ஆனால், அதேநேரத்தில், பாரதிய ஜனதா கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்கள் வைத்த கோரிக்கைக்கு ஏன் பதில் சொல்லாமல் விட்டுவிட்டார் என்று எனக்குப் புரியவில்லை. அவர் ஒரு கோரிக்கையை வைத்திருந்தார். கோவையில் நூலகம் அமைக்கப்படும் என்ற அறிவிப்பிற்கு நன்றி தெரிவித்துவிட்டு, அது எங்கே அமையவிருக்கிறது, எவ்வளவு நிதி ஒதுக்கப் போகிறீர்கள், எப்போது ஆரம்பிக்கப் போகிறீர்கள், எப்போது அந்தப் பணிகள் முடிவடையும் என்று கேள்விகளைக் கேட்டிருந்தார்கள். அது நிச்சயமாக உடனடியாக செயலாக்கத்திற்கு வரும். ஏனென்றால், இந்த ஆட்சி சொன்னதைச் செய்யும், சொன்னதைத் தாண்டியும் செய்யும், செய்வதைத்தான் சொல்லும். (மேசையைத் தட்டும் ஒலி)

மதுரையில் எவ்வாறு உலகத்தரம் வாய்ந்த கலைஞர் நூலகம் குறிப்பிட்ட காலத்திற்குள் கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டிருக்கிறதோ, சென்னையில் கலைஞர் சிறப்பு பல்நோக்கு மருத்துவமனை, மதுரை அலங்காநல்லூரில் ஜல்லிக் கட்டுக்காக ஏறுதழுவுதல் அரங்கம் அமையப் பெற்றிருக்கின்றனவோ, இன்னும் சில தினங்களில் நம்முடைய கலைஞர் நினைவிடம் அமையவிருக்கிறதோ, அதேபோல் அதுவும் சொன்னபடி நிச்சயமாக இந்த ஆட்சியில் நடக்கும்.

ஆனால், திருமதி வானதி சீனிவாசன் அவர்களுக்கு நான் ஒன்றை மட்டும் உறுதியாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நிச்சயமாக மதுரையில் AIIMS அறிவிக்கப்பட்டதைப்போல் இல்லாமல், (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) குறிப்பிட்ட காலத்திற்குள் கட்டி முடிக்கப்படும். அதுவும் குறிப்பிட்ட நாளையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் அது திறக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) திறப்பு விழா நிகழ்ச்சிக்கு உங்களுக்கு முறையாக அழைப்பு வரும். நீங்களும் வந்து விழாவில் கலந்துகொள்ள வேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிலளித்தார்

---

குளித்தலை தொகுதியில் - அய்யர் மலையில் 1200 அடி உயரத்தில் அமைந்துள்ள

# இரத்தினகிரீஸ்வரர் திருக்கோவிலுக்கு ரோப் கார் வசதி செய்து தரப்படுமா?

## சட்டப்பேரவையில் குளித்தலை இரா.மாணிக்கம் கேள்வி!



சென்னை, பிப்.24 -

சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின் போது குளித்தலை தொகுதியில் 1200 அடி கொண்ட அய்யர் மலையில் அமைந்துள்ள இரத்தினகிரீசுவரர் திருக்கோவிலுக்கு ரோப்கார் வசதி செய்துதரப்படுமா என்று கேள்வி எழுப்பினார்.

பேரவையில் இது தொடர்பாக நடைபெற்ற விவாதம் வருமாறு:

**இரா. மாணிக்கம்:** குளித்தலை தொகுதியில் உள்ள அய்யர்மலை இரத்தினகிரீசுவரர் திருக்கோயில் சுமார் 1,200 அடி உயரம் கொண்ட சிவன் கோயிலாகும். அந்த திருக்கோயிலுக்கு rope car வசதி வேண்டுமென்பது பொதுமக்கள் மற்றும் பக்தர்களின் கோரிக்கையாகும். நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் அதற்கான அரசாணை வெளியிடப்பட்டு, 2010 ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டது.

அதன் பிறகு வந்த ஆட்சியாளர்களால் அந்த திட்டம் கிடப்பில் போடப்பட்டு, அதன்பிறகு திராவிடர்கள் ஆட்சியின் முதல்வர் தளபதி அவர்களின் அமைச்சரவையில் இந்து சமய அறநிலையத் துறையின் அமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, அமைச்சர் அவர்கள் அய்யர் மலையில் உச்சி மலைக்கு வந்து ஆய்வு செய்து, அதிகாரிகளை அறிவுறுத்தி விரைவில் அந்தப் பணியை முடிக்கச் சொல்லியிருந்தார்கள்.

அந்தப் பணிகள் எப்போது முடியும். அந்த rope car எப்போது வரும் என்று மக்கள் எல்லோரும் மிகுந்த ஆவலோடு இருக்கின்றார்கள் என்பதையும் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்து எப்போது அது பயன்பாட்டுக்கு வரும்?

**பி.கே.சேகர்பாபு:** குற்றச்சாட்டாக அல்ல அவையின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்காக 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26 ஆம் தேதி காலையிலே அந்த rope car மக்கள் பயன்பாட்டிற்கு அன்றைய அரசு அர்ப்பணித்ததாகக் கல்வெட்டு இருக்கின்றது. ஆனால், அந்தப் பணி என்பது 50 சதவிகிதப் பணிகள் கூட முடிவுறாத நிலையில் தவறான தகவலின் அடிப்படையில் அந்த rope carஐ செயல்பாட்டிற்குக் கொண்டுவருவதாக அறிவித்துவிட்டார்கள். அதன்பிறகு நம்முடைய உறுப்பினர் வைத்த கோரிக்கையை ஏற்று 1,201 படிகள் கொண்ட அந்த மலைக்கு நானும் நேரடியாக சென்று, அதிகாரிகளை அழைத்துச் சென்று ஆய்வு செய்தோம். கிட்டத்தட்ட கழிவறைகள் இல்லை. கழிப்பிட வசதி இல்லை. பயணிகள் வருகின்றபோது தங்குவதற்கு பக்தர்கள் தங்குகின்ற கூடம் இல்லை. அதேபோல், தண்ணீர் வசதி இல்லை. வருகின்ற வாகனங்களை நிறுத்துவதற்குண் டான வாகன நிறுத்துமிடம் இல்லை. இவையெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவைப் பெற்று தற்போது 1 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு, பணிகள் நடைபெற்று கொண்டிருக்கின்றன. வெகு விரைவாக அடுத்தமாத இறுதிக்குள் அந்த rope car மக்கள் பயன்பாட்டிற்கு வருவதற்குண்டான அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுகின்ற பணிகளை மேற்கொண்டு இருக்கின்றோம். அதேபோல், சோளிங்கர் மலையினுடைய rope carம் அதே நாளில் மக்கள் பயன்பாட்டிற்கு அற்பணிக்கப்பட்டது. எந்தப் பணிகளும் நிறைவேறாமல் நம்முடைய மாவட்ட மாண்புமிகு அமைச்சர் காந்தி அவர்களுடைய தனிப்பட்ட முறையில் 12 கோடி ரூபாய் உபயதாரர் நிதி பெற்று தற்போது அனைத்துப் பணிகளையும் நிறைவு செய்து, இந்த மாத இறுதிக்குள் அதை மக்கள் பயன்பாட்டிற்கு தமிழக முதல்வர் அவர்கள் பொற்கரங்களால் ஒப்படைக்க இருக்கின்றார் என்பதை பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.



கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்களின் தந்தை முத்தூர் சா.பெருமாள்சாமி கவுண்டர் அவர்கள் (வயது 94) வயது மூப்பின் காரணமாக உடல்நலக் குறைவினால் இயற்கை எய்தினார். அன்னாரின் உடலுக்கு அமைச்சர் கழகக் கொடி போர்த்தி மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இதில் திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன் உள்பட ஒன்றிய, நகர, வார்டு, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் உள்ளனர்.